**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 137** **நாள்: 08.09.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி, அம்பத்தூர் மண்டலம் அத்திப்பட்டு கிராமத்தில் சாலையை ஆக்கிரமித்து அமைக்கப்பட்ட தனியார் தொழிற்சாலை அகற்றப்பட்டு சாலை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப.அவர்கள் தெரிவித்துள்ளார்.**

= = = = =

பெருநகர சென்னை மாநகராட்சி, அம்பத்தூர் மண்டலம், வார்டு–86 அத்திப்பட்டு கிராமத்தில் உள்ள நடேசன் நகர் குறுக்குத் தெருவில் சாலையை ஆக்கிரமித்து அமைக்கப்பட்ட தனியார் தொழிற்சாலை மாண்புமிகு உச்ச நீதிமன்ற உத்தரவின் பேரில் அகற்றப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

அத்திப்பட்டு கிராமம் சர்வே எண் 378/2, நடேசன் நகர் குறுக்கு தெருவில் பொது மக்கள் பயன்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 24 அடி அகல சாலையில் 300 அடி நீளத்திற்கு சு.குருநாத் மற்றும் G.சசிகலா ஆகியோரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு ஸ்ரீ லட்சுமி இன்ஜினியரிங்க்ஸ் என்ற தொழிற்சாலை நடத்தப்பட்டு வந்தது. ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்தின் சந்தை மதிப்பு 5 கோடியாகும். அச்சாலை முழுவதும் சுமார் 600 அடி நீளம் மற்றும் 24 அடி அகலத்திற்கு பொது மக்கள் பயன்பாட்டில் இல்லாமல் தனியார் வசம் இருந்து வந்துள்ளது. இதனால் கடந்த காலங்களில் மழைநீர் செல்ல வழியில்லாமல் இந்த தொழிற்சாலையின் பின்புறமுள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கபட்டன.

எனவே, மேற்கண்ட சாலை ஆக்கிரமிப்பை அகற்ற ஆக்கிரமிப்பாளருக்கு 09.11.2017 அன்று தாக்கீது வழங்கபட்டது. இதனை எதிர்த்து ஆக்கிரமிப்பாளர் தொடர்ந்த வழக்கில் 09.01.2018 அன்று ஆக்கிரமிப்பை அகற்ற உத்தரவு பெறப்பட்டது. அந்த தீர்ப்பினை எதிர்த்து ஆக்கிரமிப்பாளர் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ததில் 23.04.2018 நாளிட்ட உச்ச நீதிமன்ற தீர்ப்பில் 31.08.2018 வரை ஆக்கிரமிப்பை ஆக்கிரமிப்பாளரே அகற்ற கால அவகாசம் வழங்கி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மாண்புமிகு உச்சநீதிமன்ற வழங்கிய தீர்ப்பின்படி ஆக்கிரமிப்பாளர் குறிப்பிட்ட காலத்திற்குள் சாலை ஆக்கிரமிப்பை அகற்றாததால், காவல்துறை, தீயணைப்பு துறை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களின் ஒத்துழைப்போடு பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் சாலையை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டிருந்த தொழிற்சாலை அகற்றப்பட்டது.

தற்பொழுது ஆக்கிரமிப்பு முழுவதும் அகற்றப்பட்டு சாலை பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், இச்சாலையில் இதுநாள் வரையில் கட்டி முடிக்கப்படாமல் உள்ள மழைநீர் வடிகால்வாய் பணியும் உடனடியாக துவங்கப்பட உள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**